உ

தேவிசகாயம்.

திரிசிரபுரம் சமயபுரத்தில் எழுந்தருளிய

# மாரியம்மன் பதிகம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

78

தேவிசகாயம்.

# சாற்றுக்கவி.

திரிசிரபுரம் உறையூர் மின்னப்பன்தெருவு

ம-ள-ள-ஸ்ரீ,

அ. ஆதித்தனெனும் அன்பராலியற்றியது.

அணிகள்பலபூஸ்திதிக ளிணிவாய்திரட்டிவைத்
 தையமென் றோர்தமக்கு
அணிவாகிலுமிரங் கியாதமனமுளோர்க்
 கன்றசந் ததிகளோங்கி
மணிகள்தினம்வாரியிப் புவிமீதிரப்பவர்க்
 கீந்துபவமற மன்னர்போல்
அமரர்துதிசமயபுர மாகாளிதேவியின்
 னருள்பெறும் இனியதொண்டன்
கனிகள்மிகுசுவைபோல யிலகுசுருமலருற்ற
 கமழுமுக் கண்ணிபதிகம்
கடினமனமிருள்கெடக் கிரவிசந்திரரெனக்
 கருதினரிவ் வரையின்மேல்
பணிகள்நவமணிபூண் டிலங்குதாமரையினடி
 பண்பாய்மிகத் துதித்து
பலன்பெற்றிடுந்தேசிகன் கந்தசாமியுரை
 பகரயிது தருணமிதுவே.

## ஷை யூர் பாண்டமங்கலம் ம-ா-ா-ஸ்ரீ, பாண்டியபிள்ளை அவர்கள் இயற்றியது.

சீர்மிகுந்தசமயபுரத் தலத்துறையுமகமாயி
சிறப்பைநன்றாய் [மணக்
கார்பொழிந்துபயிர்செழித்த குணமதுபோல்உயிர்கள்
கஞ்சம்பூக்க
பார்புகழ்ந்தபதிகமெனுங் கவிவாலையாய்ந்தெடுத்தார்
பகதிபூண்டு
வார்புனைந்தகௌரிபதம் வணங்குகந்தசாமியெனும்
வல்லோன்மாதோ.

### வெண்பா.

திருமருவுசமயபுரத் தேவிமகமாயிதன்மேல்
நருமலர்சேர்பாமாலை நாட்டுதற்கு—இருவினையை
போக்குமறுமுகர்க்கும் பொன்வெள்ளைமேனியற்கும்
கார்க்குங்கரிமுகற்குங் காப்பு.

### பதிகம்.

பொங்குங்கடலேசூழ்ந்த சிங்காரமானதொரு பூதல விலாசமெங்கும், புகழ்கொண்ட கீர்த்திப்பிர தாபமது வாகவும்போதரவதாயமர்ந்த, நங்கைபிராமி கிருபாகரி மநோன்மணி நானிலமெலாந்துதிக்கும், ஞானதத்துவ மாயி மோனநிஷ்களவாயி நாடினோர்வல்வினைதனை, பங்க மதுவாக்கியவர் தீவினைவிலக்கியுன் பாததாமரைநல்கு

வாய், பாரெலாங்கொண்டாடும் பூரணதயாநிதி பவள வதனத்தியார்க்குஞ், சங்கநிதிபத்மநிதி யாகவருள்தருக வே சமயபுர மதனில்மேவுஞ், சற்குணமிகுந்த மாகாளி கங்காளியே சத்திமகமாயி உமையே (க)

அன்னாளில்வடதேச மதிலிருந்தன்பர்களனைத்தை யுங் கார்ப்பதற்காய், அக்கினிக்கும்பமொன் றேந்தியகர த்துடன் அருள்கிருபை விழிபார்வையாய், கண்ணாபிர ங்கொண்ட கருணாசமுத்திரமே கனகசிம் மாசனத்தில், காரணிசீரணி தாரணியிலுன்மகிமை கருதொணாதொரு வராலும், விண்ணோர்களும்புவியி லுள்ளோர்களும்பர வும் வேதவேதாந்தநிமலி, வேதியர்குலத்துதித் தாயிமக மாயியென் வினை துயரமகற்றியருள்வாய், சன்னகமுடன் மிக்க கன்னபுரமுஞ்சூழ்ந்த சமயபுரமதனில்மேவும், சற் குணமிகுந்தமாகாளிகங்காளியேசத்திமகமாயிஉமையே.

காரொமுகுகூந்தலில் சுட்டிசடைநாகமுங் கதிரொ ளிகள் போல்மின்னவும், கனகநவரத்தின ஜிமிக்கைமுத் தாரமுங் கருணைவிழி பார்வையழகும், வாரொமுகுஸ்த னபார மாதணிபதக்கமும் வர்ணநிறமானகிளியும், வண் மைபெருகணையாழி யணிவிரலினழகையும் வர்ணிக்க வொருவர்வசமோ, ஏரொமுகுபட்டாடை மீதிலொட்டி யாணமு மியல்நூபுரத்தண்டையும், எங்குமுள்ளோர் மணியுமிங்கிதபதத்தினி லியல்மெட்டிபீலியழகும், சார

மதுராந்தரத தேர்தனில் பவுனியாய் சமயபுர மதனில்மே வும், சற்குணமிகுந்தமா காளிகங்காளியே சத்திமகமாயி உமையே. (௩)

அண்டரண்டங்களும் புகழ்பெற்றமாரியே அம்மைகளனேகவிதமாய், அவனிதனில்வார்த்தபோ துனது பெருமகிமைதனை அவரவர்களேநினைந்து, தெண்டனஞ் செய்துபல பூசைகளனேகமாய் தூபமதுயேந்திநின்றுந், தேவியித்துயர்தீரு மென்றுனதுபதுமலர்கள் தெரிசித்து நின்றபேர்க்கு, பண்டிதஞ்செய்தவர்கள் தீவினையகற்றி நற் பதவிதந்தருளுமீவாய், பரிமளமிகுந்தநரு மலர்மாலையணிகின்ற பதுமாசனத்திவேணி, சண்டனது மாயை தனி லாழ்ந்திடாதருள்புரிய சமயபுர மதனில்மேவும், சற்குண மிகுந்தமா காளிகங்காளியே சத்திமகமாயி உமையே. (௪)

மந்திரசொரூபி ஓங்காரிஸ்ரீங்காரியென மன்பர்துதி செய்துன்னடியை, மறவாமலெப்பொழுதும் விரைவாக நாடியே மாந்தர்முனிதேவர்முதலாய், அந்தரமதாய்வரும் ஊழியைவிலக்குமென் றஞ்சலிச் செய்துநின்ற, அம்பிகாதேவியுன் னிருதயமகிழ்ந்திட அவனிதனி லேமனுக்கள், சந்திகள்பிரித்துமிக பந்தலொடுவாத்தியஞ் சகல மணிமேடைசெய்து, சர்வஜனமுங்கூடி கரகமெடுத்துனது தாழ்பணியஆதரிப்பாய், சந்திரநிகர்வதனியே கெ

ந்தருவர்கொண்டாட சமயபுரமதனின்மேவுஞ், சற்குண
மிகுந்தமா காளிகங்காளியே சத்திமகமாயி உமையே. ()

சுந்திரமிகுநதுவளர் கின்றபரிபூரணி சுகுணகல்யா
ணியுன்றன், சூட்சாதிசூட்சத்தை ஆச்சியினியாரறிவர்
தொகைபெறு மகிமையதனை, எந்தனாலுரைசெய்வதெப்
படிஅம்மணி யெப்பிறப்பில்லாமலே, எச்சமய முங்கிரு
பை வைத்துனதுபாதமதி லீடேற்ற வருள்புரிகுவாய்,
கந்தமிகுவாசனை நிறைந்துமலர்சூடிடுங் கருணை வழிகின்
றதாயே, கண்மணிக்கினிதாக வுன்மனமிறங்கியென் கவ
லையறவேசெய்குவாய், சந்ததம்அண்டர்பணி கின்றமா
தங்கியே சமயபுரமதனின்மேவும், சற்குணமிகுந்தமா
காளிகங்காளியே சத்திமகமாயி உமையே. (௬)

அன்னைநீ தந்தைநீ யென்னுடைய சுற்றநீ ஆதரவு
செய்யுமுமைநீ, அண்டநீபிண்டநீ யாவுநீ யென்றனது
ஆச்சியென் றனையடைந்தேன், வண்ணமால் மாய்கைத
னில் வாழ்ந்துவிழிமங்காமல் வஞ்சகன் றடராமலும்,
வாடித்தவித்துபல வாதனையிலாழ்ந்தாமல் வாய்தந்தம்
கழுவாமலும், நன்னயமதாகவும் அண்ணலார் பாதமதில்
நாடிவைத்தருளோங்கிய, ஞானதத்துவமெனக் கழித்து
மறுபிறவினில் நானுமேவந்திடாமல்; சந்நிதிநிறைந்து
வருமன்னரிடர்த்தீர்க்கவே சமயபுரமதனில்மேவுஞ், சற்
குணமிகுந்தமாகாளிகங்காளியேசத்திமகமாயிஉமையே.

ஆச்சிநீசூட்சிவி சாலாட்சி கௌமாரியென் றன்புடன்றொழுதுவெகுபேர், அங்கப்பிரதட்சணங்கோடுகள் கிழித்துமே ஆடிவலம்வந்துவெகுபேர், காட்சிகள்விளங்குமக மாயிநீகாரென்று கரகமதெடுத்துவெகுபேர், கண்ணடக்கம்நர புருவாரமதுசெய்து காணிக்கை கொண்டு வெகுபேர், கூச்சமில்லமலே கரும்புள்ளி செம்புள்ளி குத்திமணி கட்டிவெகுபேர், கோவில்வலம்வந்துமா விளக்க துஎடுத்தெங்கள் குறைதீருமென்பர்வெகுபேர், சாசுவதமாகநிலை கொலுவாகவீற்றநீ சமயபுர மதனில்மேவும், சற்குண மிகுந்தமா காளிகங்காளியே சத்திமகமாயி உமையே. (அ)

புனலைந்துபொறிஐந்து பூதாதிஐந்துடன்பொருந்துமிந்திரியமைந்தாய், புகலரியதசவாய் வெனும்தத்துவமாகயிப் புவியதனிலேயுதித்து, மனமானததுவுமிச் சகமாயைதன்னிலே மயங்கியே நிதமும்நொந்து, வாடித்தவிததுவுனை நாடித்துதிப்பர்மேல் மனமுனதுகிருபைகூர்ந்து, துணிவானயெமதூதர் அணுகாமல் அனுதினம் துடர்ந்துசா யுச்சியமீவாய், துலங்குநின் கழல்சேர்வைதனிலுமனமணுகவுஞ் சூட்சிபருளேயுவந்து, சனகாதி முனிவோர்க ளனைவருங்கொண்டாட சமயபுர மதனில் மேவும், சற்குணமிகுந்தமா காளிகங்காளியே சத்திமகமாயி உமையே (கூ)

மண்ணினிலிருப்பனவும்மண்மீதிலாசையும் மனைவிமைந்தரிலாசையும், மாடாடுவீடுபொன் னாசைதனிலே

மனம் வாடித்தவித்திடாமல், அண்ணலார்பதமலரி லா சைவைத்தகமகிழ்ந் தனுதினம் பணிசெய்யவும், ஆச்சிநீ கிருபைவைத் தன்னினை வெணக்கருமே யருள்புரிய நாட் செல்லுமோ, முன்னவினை யாலுமிச் சன்மமதெடுத்து நான் மூதறிவிலாமலுந்தான், முற்றுமிச்சகமாயை தனி லுமனமில்லாமல் முக்கண்ணார்பகவனுன, சண்முகனை யீன்றபரன் பதமணுகவேசெய்யும் சமயபுரமதனின்மே வும், சற்குணமிகுந்தமா காளிகங்காளியே சத்திமகமாயி உமையே (௧0)

தனிகொண் டிலங்குமித் தாரணியில் மனிதரைத் தயங்கமன வேறுபாடாய், தத்தளித்திடுபித்த வாதமெரி குன்மமுந் தலைவலியோ டெழுபிளவையும், அணிகொ ண்டிடாகண்ட மாலைபருவிக்கமும் ஆனைசொரியொடு குஷ்டமும், அணுகொணுதிமிர்வாய்வு சூடல்வாதமரை புண்ணு அரையாப்பொ டெதுகூலையும், இனிகொளாப் பீனிசங் காமாலைசோபைநளி ரீளைக்ஷய மதுமேகமும், இடாருங்கிரந்திவை சூரிபெருவாந்தியும் இனியதிருவடி கண்டுடன், சனிபிணிகள்வாடியே சுதிகெட்டுஓடவுஞ் சமயபுரமதனில்மேவும, சற்குணமிகுந்தமா காளிகங்கா ளியே சத்திமகமாயி உமையே. (௧௧)

மாரியம்மன்பதிகம் - முற்றிற்று.

———